**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண் 296/2018**

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.07.2026 | | |
| பெயர்: | சத்தியசீலன் (DW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | சாமி |
| கிராமம்: | மகேந்திரபள்ளி பவுசுப்பேட்டை | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 23.07.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்–12.44 )**

1. தாவா சொத்தின் சர்வே எண் என்பது 152/1A2 ஆகும். அதன் பழைய புல எண் என்பது 152/1A என்றால் சரிதான். தாவா புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 42 செண்ட் என்றால் சரிதான். மேற்படி 42 செண்ட்டையும் மைமூன் பீவி என்பவர் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 42 செண்ட்டில் கடந்த 10.12.1986ல் மைமூன் பீவி, சாரா பேகத்திற்கு 27 செண்ட் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. மேற்படி 42 செண்ட்டின் மற்றொரு பகுதியான 13 1/3 செண்ட் நிலத்தை மைமூன் பீவி, வாதி அபிபுல்லாவிற்கு 06.09.1994ல் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 13 1/3 செண்ட்டை தான் வாதி தாவா சொத்தாக காட்டியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. தாவா சொத்திலிருந்து 38 ச.மீ தேசிய நெடுஞ்சாலைக்காக அரசு சார்பில்

புறவழிச்சாலை அமைக்க எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 38 ச.மீ போக மீதமுள்ள 502 ச.மீ தான் வாதி தாவா சொத்தாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா புல எண்.152/1A2ன் மொத்த விஸ்தீரணம் 0.16.5 ஏர்ஸ் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. மொத்தமுள்ள 42 செண்ட்டில் சாரா பேகத்திற்கு கொடுக்கப்பட்ட 27 செண்ட், வாதிக்கு கொடுக்கப்பட்ட 13– 1/3 செண்ட் போக மீதமுள்ள 1– 2/3 செண்ட் தான் மைமூன் பீவிக்கு சொந்தமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மைமூன் பீவிக்கு 1 2/3 செண்ட் தான் மீதம் உரிமையாக உள்ளது என்றாலும், ஆனால் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1 2/3க்கும் அதிக விஸ்தீரணம் கிரயம் செய்து கொடுக்க முடியாது என்பதால் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் முழு விஸ்தீரணத்திற்கும் மைமூன் பீவிக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

5. மைமூன் பீவியிடமிருந்து பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக ஜன்னத் பீவி கிரயம் பெற்றது செல்லாது என்பதால் அதனடிப்படையில் ஜன்னத் பீவியிடமிருந்து நான் கிரயம் பெற்ற பி.வா.சா.ஆ.2 ஆவணமும் செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் செல்லாது என்ற காரணத்தால் அதனடிப்படையில் ஏற்பட்ட பி.வா.சா.ஆ.3 ஆவணமான பட்டா மாறுதல் உத்தரவும் செல்லாது என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.8 ஆவணம் மைமூன் பீவி 2ம் பிரதிவாதியான தின்ஷாத் பேகத்திற்கு எழுதிக் கொடுத்த கிரய சாசனம் என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தில் புல எண் என்பது 151/1D2C (பழைய புல எண்.151/1D) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் மேற்கண்ட புல எண் பற்றி திருத்த பத்திரம் ஏற்பட்டுள்ளது.

7. பி.வா.சா.ஆ.12 ஜாகிர் ஹுசைனிற்கு மைமூன் பீவி எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் புல எண். 151/1D2C (பழைய புல எண்.151/1D) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தின்ஷாத் பேகத்திற்கு ஜாகிர்

ஹுசைன் தம்பி முறை ஆவார். பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்திலும் புல எண். 151/1D2C (பழைய புல எண்.151/1D) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. ஜாகிர் ஹுசைனிற்கு மைமூன் பீவி எந்த பிழை திருத்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். மைமூன் பீவி எந்த பிழை திருத்த ஆவணமும் ஜாகிர் ஹுசைனிற்கு எழுதிக்கொடுக்காதபோது, ஜாகிர் ஹுசைன் தின்ஷாத் பேகத்திற்கு பி.வா.சா.ஆ.11ல் பிழை திருத்த ஆவணம் எழுதிக்கொடுத்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.11ல் புல எண்.152/1A2 என திருத்தம் செய்திருப்பது சரியல்ல என்றால் சரியல்ல.

9. பி.வா.சா.ஆ.10 ஆவணமான மைமூன் பீவி வாரிசுதாரர்களிடமிருந்து தின்ஷாத் பேகம் பெற்ற திருத்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மொத்தமுள்ள 42 செண்ட்டில் சாரா பேகத்திற்கு கொடுக்கப்பட்ட 27 செண்ட், வாதிக்கு கொடுக்கப்பட்ட 13– 1/3 செண்ட் போக மீதமுள்ள 1– 2/3 செண்ட் தான் மைமூன் பீவிக்கு சொந்தமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மைமூன் பீவிக்கு 1 2/3 செண்ட் தான் மீதம் உரிமையாக உள்ளது என்றாலும், அதனால் அதற்கு கூடுதலாக அதே சர்வே எண்ணில் தின்ஷாத் பேகத்திற்கு பிழை திருத்த ஆவணம் எழுதிக்கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல.

**(முடிவு நேரம்– 13.18)**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.